உ

சிவமயம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்

லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திரு அம்பலவாணர் விக்னேஸ்வரன்

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

02.11.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு அம்பலவாணர் விக்னேஸ்வரன் அவர்கள்



அன்னை மடியில் 02. 01. 1939

ஈசன் அடியில் 03. 10. 2016

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த புரட்டாதி
பூண்ட பூர்வபக்க திரிதீயையில் - மாண்பு
அம்பலவாணர் மைந்தன் விக்னேஸ்வரன் ஐயன்
அம்பலத்தான் கழலடைந்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



**பஞ்சபுராணம்**

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினர் அவா நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு அம்பலவாணர் விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஈழமணித்திருநாட்டின் வடக்கில் பசுமையான நெல் வயல்களும் வானம் பார்த்து வளர்ந்த பயன்தரும் மரங்களும் நிறைந்த சரித்திர புகழ் பெற்ற யாழ்ப்பாணம் என்னும் மாநகரில் அமையான அழகான உரும்பிராய் என்னும் கிராமத்தில் வேளாண்மையில் சிறந்து விளங்கிய அம்பலவாணர் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனாக 02.01.1939ம் ஆண்டு பிறந்தார்.

இவர் பெற்றோர் அம்பலவாணர் சிவக்கொழுந்து தம்பதிகளின் இல்லறவாழ்வின் தவப்பயனாக நான்கு முத்துக்கள் அவர்தம் வயிற்றில் வந்துதித்தனர். அவர்கள் பரமேஸ்வரி, சரஸ்வதி, பாலசிங்கம், விக்னேஸ்வரன் என்னும் பிள்ளைகள் ஆவார்.

விக்னேஸ்வரன் அவர்கள் தாயின் மடியில் தவண்டு தளிர் நடைபோட்டு பள்ளிப்பருவத்தை எய்தினார். இவர் ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையிலும் அதன் பின்னர் கல்வியை உரும்பிராய் இந்துக்கல்லூரியிலும் பயின்றார்.

இவர் தம் படிப்பை முடித்த பின் உரும்பிராய் சந்தியில் பிரபலமான பலசரக்கு கடை உரிமையாளராக திகழ்ந்தார். இவர் திருமண வயதை எட்டியதை உணர்ந்த பெற்றோர் அதே கிராமத்தில் வாழ்ந்த Tea Estateல் மேற்பார்வையாளராக தொழில் புரிந்த செல்லக்குட்டி சரஸ்வதி தம்பதிகளின் செல்லமகளுமான லவபூஷணம் என்னும் நங்கைக்கு மணம் புரிந்து வைக்க எண்ணி திருமணத்தை 1966ம் ஆண்டு சித்திரை மாதம் இனிதே நடாத்தி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் உருண்டோடியது இவர்களின் இல்லற வாழ்வின் நற்பயனாக உமா, பாமா, ரமா ஆகிய மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றனர். இவர் தனது மூன்று பெண்குழந்தைகளின் மேல் அளவு கடந்த பாசமும் அன்பும் காட்டி வந்தார். பிள்ளைகள் பிறந்த பின்னர் பெரிய அளவில் விவசாயமும் இவரது மூத்த மகளான உமா எனதும் பெயரில் UMA TRANSPORT என்னும் Lorry Transport Company ஐ (யாழ்ப்பாணம் - கொழும்பு) நடாத்தி வந்தார். இவர் பிள்ளைகளின் கல்வி பருவத்தை உரியமுறையில் செப்பனவே செய்து மகிழ்வு கண்டார். மூத்த மகளான உமாவிற்கு அரவிந்தன் என்னும் வரனும் பாமாவுக்கு கணேசன் என்னும் வரனும் இளைய மகளான ரமாவுக்கு கணேசராஜ் என்னும் வரனையும் திருமணம் செய்து வைத்து அழகு பார்த்தார். இவர் ஊரில் இருக்கும் காலத்தில் சமூக பணிகளில் முன்னின்று ஈடுபட்டு வந்தார். தனது ஊராகிய உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமி ஆலய பொருளாளராக இருந்து அக்கோவில் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டார்.

இவர் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் வாழ்வதற்காக ஊரில் இருந்து இங்கிலாந்துக்கு வந்தார். இவரின் பேரப்பிள்ளைகள் மாலவன், நித்திலன், லவன், மிதுலன், அரங்கவி, அபிநயா ஆவார்கள். இவர் சில மாதங்களுக்கு முன்னர் தனது 50வது திருமண நாளை பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும், உற்றார், உறவினர்களுடனும் வெகு சிறப்பாக கொண்டாடினார். பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்த வேளை இவர் 03.10.2016 அன்று இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவனன்றி அசையாது எதுவும்....

எங்கு சென்றாலும் என்னையும் அழைத்துக்கொண்டு செல்வதுதான் உங்களது வழக்கம், ஆனால் இந்தமுறை மட்டும் ஏன் தான் என்னை தனியாக இங்கு விட்டு போய்விட்டீர்கள். கண்ணை மூடித்திறப்பதற்குள் தொலைதூரம் போய்விட்டீர்கள். என்னுடன் வாழ்ந்த வரை என்னை உங்கள் உள்ளங்கையில் வைத்து தாங்கினீர்கள், மேலும் எல்லா வசதிகளையும் தந்தீர்கள். அதே போன்று, இன்று நீங்கள் சென்றிருக்கும் இடத்திலும் எல்லா வசதிகளையும் அமைத்துவிட்டு ஒரு நாள் என்னையும் அழைப்பீர்கள் என நம்பி இருக்கிறேன்.

ஒரு நல்ல கணவனாக, எம் பிள்ளைகளுக்கு நல்ல அப்பாவாக, நல்ல மாமாவாக, தாத்தாவாக, ஒரு சகோதரனாக மற்றும் அனைவருக்கும் ஆதரவான சொந்தக்காரனாக, ஒரு நல்ல சினேகிதனாக நீங்கள் வாழ்ந்தீர்கள். அதற்கு மேல் ஒரு நல்ல மனிதனாக நீங்கள் வாழ்ந்ததில் பூரண திருப்திப்பட்டிருக்கிறேன். எங்களுக்குத் திருமணம் ஆகிய நாளில் இருந்து எனது தேவைகளை முற்கூட்டியே அறிந்து அவற்றை நிறைவேற்றுவீர்கள். எனக்கு பிடித்தது எது, பிடிக்காதது எது என்று தெரிந்து கொண்டு இதற்கேற்ப நடந்து, என்னை எப்பொழுதும் மனம் கவலைப்பட விட்டதேயில்லை. ஆண்டவன் எனக்கொரு நல்ல கணவனை தந்ததிற்கு நன்றி சொல்லாத நாளே இல்லை.

இன்று எதோ என்னைச் சுற்றி நடக்கிறது என்பது போலவும் கண்ணைக் கட்டி நடுக்காட்டில் விட்டதைப் போலவும் உணர்கிறேன். ஏனென்றால் எனக்கு தேவையானது என்னவென்று என்னைவிட உங்களுக்குத் தெரியும், அதனால் எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து பார்த்து செய்தீர்கள். எனது உலகம் நீங்கள் தான், அதனால் நீங்கள் இல்லாத இந்த உலகம் இன்று வெறுமையாகவே தெரிகிறது. என் பார்வை நீங்கள் தான் அதனால் இன்று கண் இருந்தும் குருடி ஆகிவிட்டேன்.

எத்தனை பேர் என்னைச் சுற்றி இருந்தாலும், யார் தான் எத்தனையோ விதமான ஆறுதல் வார்த்தை சொன்னாலும் என் இழப்பு ஈடு இணையற்றது. தூக்கமின்றி, பசியின்றித் தவிக்கிறேன் உங்களை நினைத்து. என் மிகுதிக்காலத்திலும் நானும் முன்னர் இருந்ததைப் போல் இருக்கப்போவதில்லை. இது மட்டும் தான் உறுதியாகத் தெரிகின்றது. வெறுமையும் தனிமையும் தான் என் சொத்துக்கள் இன்று.

மற்றவர்களுக்கு நீங்கள் மரணித்து இருந்தாலும் என்னைப் பொருத்தவரை நானிருக்கும் வரை என்னுடன் நீங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருப்பீர்கள். எங்கு பார்த்தாலும் உங்கள் முகமும், சிரிப்பும் விலகாமல் நிற்கின்றது. எவ்வளவோ உங்களைப் பற்றி எழுத வேண்டும், சொல்லி அழ வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் நா வரண்டு உடம்பெல்லாம் நடுங்கி, என் கண்ணீர் இந்தக் காகிதத்தை நனைத்து, பேனாவை நகரவிடாமல் தடுக்கின்றது எனக்குத் தெரியும் நீங்களும் என் ஞாபகமாகவே இருப்பீர்கள். இருக்கும் இடம் வேறு வேறு. ஆனால் நாங்கள் ஒன்றாகவே இருக்கிறோம். மரணம் உங்களைத் தற்காலிகமாக பிரிக்கலாம். ஆனால் நிரந்தரமில்லை.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மனைவி(லவம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவுக்கு ஒரு கடிதம்

அறிவு தெரிந்த நாள் முதல் இன்றுவரை பாசம் என்று சொல்லிற்கு அர்த்தம் உங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டோம். நீங்கள் என்றுமே உங்களுக்கு அடித்ததில்லை, ஏன் எங்கள் மனம் நோகும்படி ஒரு சுடுசொல் சொல்லியதில்லை. ஆனால் உங்கள் மேல் என்றுமே ஒரு மரியாதை கலந்த பயம் எங்கள் அனைவருக்கும். அம்மா எத்தனையோ முறை திட்டினாலும் உறைத்ததில்லை ஆனால் உறைத்திருக்கிறது என்றேனும் உங்கள் முகம் வாடும்போது.

அப்பா இன்று நாங்கள் இந்த நிலையில் இருக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் உங்கள் நேர்மை கலந்த கடின உழைப்பு மட்டுமே. எப்பொழுதும் ஏதாவது செய்த வண்ணம் சுறுசுறுப்பாகத்தான் இருப்பீர்கள். ஆனால் இன்றோ ஒருவித அசைவுமின்றி, ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறீர்களே இது விதியின் சதியா? அல்லது காலத்தின் கட்டளையா?. உங்கள் உற்சாகமும், எந்த ஒரு பிரச்சனையையும் தடுமாறாமல் சீராக்கும் திறமையும் நாங்கள் கண்டு இருக்கிறோம். பெருமைப்பட்டிருக்கிறோம். இப்படியொரு அப்பா கிடைத்திருக்கிறார் என்று.

அன்று யாழ்ப்பாணத்து அனர்த்த காலகட்டத்தில் எங்களுக்கு எந்தவித ஆபத்தும் வரவிடாமல் ஒரு கோழி தன் குஞ்சுகளை அடைகாப்பது போலவும் எங்கு எல்லாமோ திரிந்து எங்களுக்கு தேவையான உணவையும், மற்றும் தேவையானவற்றையும் தேடித்தந்தீர்கள். என்றும் தளராத மனத்தைரியத்தை அன்று பார்த்தோம். அதே போன்று எங்களுக்கு நல்ல கல்வியையும், வாழ்க்கையில் வரும் மேடு பள்ளங்களை சமாளிக்கும் மனத்தைரியத்தையும் தந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதாக எங்கள் கால்கள் தடுமாறினாலும் பதறும் நீங்கள், இன்று நாங்கள் தடுமாறிய போதும் பதறாமல் இருக்கிறீர்கள் மீளாத்துயிலில். எத்தனையோ பேர் நான் இருக்கிறேன் எனச் சொன்னாலும். அப்பாவைப் போல யார் இருக்க முடியும்? எங்கள் வாழ்க்கையில் நீங்கள் இல்லா இடம் ஒரு பெரிய தாக்கத்தையும் ஒரு இடைவெளியையும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால் நாங்கள் வாழும் வரை உங்கள் நினைவு எங்களைச் சுற்றி சுற்றி வந்து கொண்டே இருக்கும்.

அடுத்த ஒரு பிறப்பு இருந்தால், ஆண்டவனே எங்களை உங்கள் மகனாகவோ, மகளாகவோ பிறக்கவையும், ஏனெனில் அந்தளவிற்கு உங்கள் மகளாக இருப்பதில் பெருமையும், பூரண திருப்தியும் அடைகிறோம். அப்பா உங்கள் உடல் தான் எங்களைவிட்டு விலகிப் போயிருக்கிறது. ஆனால் உங்கள் உயிர் எங்களுடன் என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கும். கதறி அழுதாலும் கவலை தீராது....

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டி நிற்கும்.

உங்கள் ஆசை

மகள்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our Dearest Thatha,**

a loving man to his wife, a teacher to his children, and most of all a friend to his grandchildren. He may be gone today but he will never be forgotten. His distinctive personality, his distinctive way he goes on with his life is one we will always cherish. He was a kind man who always saw the positives in everyone even through times of hardship. It pains us to even think that he is no longer with us. Every day we wake up, wondering if all this is just a horrible nightmare, only to come to a realisation, that this is now our reality.

Thatha had a dream that all his grandchildren will one day grow up to be rich and powerful. Even though he is not here to guide us to that end goal, for him we will devote ourselves to accomplish something he once dreamed about. He's planted the seed, and it is time for us to grow into the plant. Of course, it's going to be a difficult time for everyone who knew our thatha. He has left a huge hole in the family, one that may take some time to heal, but we all have to slowly move forwards. This is what thatha would have wanted.

Thank you for all the amazing memories thatha. Thank you for the laughs, the support and the life lessons. This might be a goodbye, but not an everlasting one. We will all see you one day when our time is right. Until then, may your soul rest in peace.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From your loving Grandsons,

Lavan, Mithulan, Maalavan and Niththilan

## Our Thatha

Thatha. He was loved by many people and is dearly missed. But we have to focus on the happier moments of his life. Our earliest memory of Thatha is going to the park in the summer holidays eating crisps and cake, basking in the sunshine. I remember when he taught me how to make an origami boat and I was astonished as he transformed a piece of paper. I remember how even if it was snowing or pouring down with rain, no matter what anyone said, he would not do anything without his daily morning walk.

Another infamous memory of Thatha was when we always used to go to the duck pond. It was me, my sister, Ammama and Thatha. We would feed the ducks bread and when the ducks came too close Thatha would protect us. That was Thatha. Always protecting everyone from the bad things.

He was a husband a father a friend and a thatha and he affected so many lives during his lifetime. Although he did not study continuously, I can't think of a single thing that he could not do. If you asked him for advice, he'd offer you the best. If you asked him a calculation, he'd know it. He built himself a life of wealth, owning a farm and a majorly



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

successful business, something I will always respect him for. He did his best for his daughters, his wife and his 6 grandchildren, and that will never be forgotten.

He will be dearly missed by many people as he had such an impact on so many lives. He was such a friendly character who had a very memorable laugh. I don't have a single bad memory of Thatha as even if he did do something bad it was forgotten by all the wonderful things he did for us.

You might think that now, we have said goodbye to Thatha. However, that is not the case. Our minds are still bountiful with fond memories and until they fade and disappear, he will always be with us.

His granddaughters, Abinaya & Arangavi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவைப் பற்றி சில வரிகள்.......

உங்களை எங்கள் மாமா என்பதை விட அப்பா என்று அழைப்பதே மிகப்பொருத்தமாகும். ஏனென்றால் எத்தனையோ விடயங்களை உங்களைப் பார்த்து எங்களை மாற்றி இருக்கிறோம், எந்த ஒரு விடயத்தையும் தொலைநோக்கு பார்வையுடனும், அதன் பின் விளைவுகளையும் நன்கு யோசித்து முடிவெடுக்கும் பழக்கத்தை உங்களிடமே கற்றோம். வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை எப்படி கையாளுவது என்பதை, உங்கள் அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்தபோது தெரிந்து கொண்டோம். வியாபாரத்திலும் மற்றும் காணி சம்பந்தமான சட்ட விடயங்களை நீங்கள் கையாண்ட விதம், உங்களின் திறமையின் இன்னொரு வெளிப்பாடு, மேலும் எந்த ஒரு கணக்கையும் கேட்டால் உடனே பதில் தரும் விதமே தனி தான்.

மாமா நீங்கள் ஒரு நேர்மையின் அடையாளம், எந்த ஒரு சல சலப்பும் இல்லாமல் உங்கள் குடும்பத்தை உயர் நிலைக்கு கொண்டு வந்தீர்கள். எந்த ஒரு காலத்திலும் செய்ய முடியாததைச் சொல்லுவதுமில்லை சொன்னதைச் செய்யாமல் இருந்ததுமில்லை. இன்னும் கூட ஊரில் இருந்து, உங்களைத் தெரிந்தவர்கள், சொந்தக்காரர்கள் தொலைபேசி மூலம் அழைத்து உங்கள் நல்ல குணத்தையும் பெருமையில்லாத வாழ்க்கை முறையையும் எங்களுடன் பகிரும் போது, நீங்கள் இல்லாத வெற்றிடத்தை மிகவும் உணர்கிறோம். நீங்கள் எங்களுக்கு மட்டுமல்லாது பலபேருக்கு ஒரு முன்மாதிரி. உங்களால் எங்களுககு அடையாளமும், மரியாதையும் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உங்கள் குடும்பத்தின் மேல் அளவு கடந்த பாசத்துடன் வாழ்ந்து விட்டுப்போன உங்களுக்கு, மாமியைப் பற்றிய கவலையுடனேயே கண்ணை மூடியிருப்பீர்கள். ஆனால் நாங்கள் இருக்கும்வரை அந்தக்கவலைக்கு எள்ளளவும் இடமில்லை, எந்தவொரு காலத்திலும் நீங்கள் விட்டுப்போன இடம் மட்டும் வெறுமையாகவே இருக்கும். உங்களின் பசுமையான நினைவுகளுடன் தான் எங்கள் மிகுதிக்காலம் கழியப்போகின்றது.

எங்களுக்கு தெரியும் உங்களின் கனவு பேரப்பிள்ளைகள் ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதே, அது அவர்களுக்கும் தெரியும். இன்று நீங்கள் எங்களுடன் இல்லா விட்டாலும் உங்கள் ஆசி என்றென்றும் எங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையை மேம்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்

பசுமையான நினைவுகளுடன்

மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாற்றம் தந்தாயே சகோதரனே

அன்புச் சகோதரனே எங்கு சென்றாய். பங்குனிக்கு வருவாய் எனக் காத்திருந்தேன். மார்கழிக்கு வருவதாகத் தகவல் தந்தாய். இன்று ஐப்பசியில் தவிக்கவிட்டு மறைந்தனையே. பாசம் கொண்டவனே என் உயிராய் இருந்தவனே உன் முகம் பார்க்க முடியாமல் ஏமாற்றம் தந்தாயே. கூடிப்பிறந்து நாங்கள் கொண்ட சொந்தமிது. இன்றுவரை கண்படாமல் ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோம். என் குடும்பம் உன் குடும்பம் என்று பிரிவினைகள் யாமறியோம். அக்காக்கள் மறைந்தபோதும் கூடியழுது தேறிவிட்டோம். ஆனால் இன்றோ எனைத் தனித்து நின்று தேம்பவிட்டாய் நான் வாடியபோதெல்லாம் என் வாட்டம் போக்கியவன் நீ. நான் சாய்கின்ற போதெல்லாம் நிழலாய் இருந்தவன் நீ. தம்பியாய் உனைப் பெறவே என்ன தவம் செய்தேனோ இன்று உன் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறேன். மறுபிறப்பு என்றிருந்தால் மீண்டும் கூடிப் பிறந்திடுவோம்.

அன்புச் சகோதரர்

திரு. அம்பலவாணர் பாலசிங்கம்

குடும்பத்தினர்

கோண்டாவில், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் விக்கிச் சின்னையா........**

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தும் எம் ஊரே. அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்ததும் எம் ஊரே. அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் உதித்து சிறந்ததும் எம் ஊரே. எங்கள் உரும்பிராய் செம்பாட்டு மண்ணின் மைந்தர்களாக நாங்கள் வளர்ந்து வரும் காலமதில் எங்கள் மீது பாசம் கொண்டவர்கள், அன்பு காட்டியவர்கள், உற்சாகம் தந்தவர்கள் இன்று ஒவ்வொருவராக உதிர்ந்து வருகிறார்கள். அந்த வரிசையில் இன்று எங்கள் விக்கிச் சின்னையா எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார்.

நாட்டு நிலைமைகளால் நாங்கள் ஒவ்வொரு பக்கமாக சிதறி வாழ்ந்தாலும், எங்கள் பாச உணர்வுகள் என்றும் அழியாது. சின்னையாவின் திடீர் மறைவு எங்கள் மனங்களில் ஒரு வெறுமையை, யாராலும் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அவரது கணீர் என்ற குரல், அவரது கம்பீரம், சுறுசுறுப்பு, உங்கள் ஒவ்வொருவர் மீதும் காட்டிய அன்பு, அக்கறை என்றும் மறக்க முடியாது.

ஏறத்தாழ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகள் முன், இரவு பத்து மணிக்கும் அடங்காத உரும்பிராய் தெற்கு பலாலி வீதியில் அமைந்த அவரது கடை, ஓடிக்கொண்டிருக்கும் அவரது லொறிகள். பகலும் இரவுமாக ஆளும் பேருமாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வீடு. பொறுமையின் சின்னமாய் எங்கள் சின்னம்மா. ஒரு அன்னபூரணியாய் எத்தனை பேரானாலும், கடை வேலையாட்கள், தோட்ட வேலையாட்கள், லொறி வேலையாட்கள், மற்றும் சின்னையாவின் நண்பர்கள் என்று உணவு பரிமாறும் அழகு ஒரு பண்ணையார் வீடு போல காட்சி தரும்.

எங்கள் பூட்டனார் கருணாகரரின் உருவத்தை ஒத்து எங்கள் குடும்பங்களுக்கு ஒரு ஆணி வேராக இருந்தவர். தன் கடும் உழைப்பால் குடும்பத்தில் எல்லோரையும் வென்று உயர்ந்தவர். "தன்னிலை தாழாமையும் அந்நிலை தாழ்ந்தக்கால் உயிர் வாழாமையும் மானம் எனப்படும்" என்ற கூற்றுக்கு அமைய வாழ்ந்து காட்டியவர். என்றும் நேர்மை தவறாமல் கண்ணியமாய் வாழ்ந்தார். எப்போதும் எளிமையாய் இருந்தார். அதனால் எல்லோராலும் விரும்பப்பட்டார். மதிக்கப்பட்டார்.

ஒரு நல்ல மகனாக, சகோதரனாக, மருமகனாக, சிறந்த கணவனாக, தந்தையாக, பாட்டனாக, மாமனாக, பாசமான உறவினனாக, உணர்ச்சியுள்ள ஊரவனாக, நாட்டினனாக, சிறந்த வியாபாரியாக, நல்ல கமக்காரனாக தன் கடமைகளைச் செவ்வனே ஆற்றி தன் மனைவி மக்களை மட்டுமல்லாமல் உற்றார், உறவினர் நண்பர்கள் எல்லோரையும் ஏங்க வைத்து, சிவனின் திருவடியை பற்றிய எங்கள் சின்னையாவின் ஆத்மா பேரின்பப் பெருவாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

அன்புப் பெறாமக்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் சின்னமாமா......**

எங்கள் சின்னமாமா, மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் மேல் மாறாத பற்றும் பாசமும் நேசமும் கொண்ட ஒரு நல்ல மனிதராக வாழ்ந்தார். அவரைப்பற்றி எழுத பல பக்கங்கள் தேவைப்படும். எனவே மிக சுருக்கமாகவே கூறுகிறேன்.

அவர் தன் வாழ்க்கையின் அடி மட்டத்தில் இருந்து உயர்ந்து அதி உயர் வெற்றி சிகரங்களை எட்டி தொடும்வரை எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு விடா முயற்சியுடன் அயராது உழைத்தவர். குடும்ப நிகழ்ச்சியிலும் சரி, சமூக நிகழ்ச்சியிலும் சரி கோவில் பரிபாலன சபை பொறுப்பிலும் சரி தலைமை தாங்கி முன்னின்று நடத்தும் பொறுப்பு அவருக்கு கிடைத்து விடும். அவரும் அவற்றை திறம்படவே செய்து நிறைவேற்றுவார்.

அவர் செய்து வந்த தொழிலின் தன்மையானது பல நண்பர்களை சேர்த்து வைத்தது. ஊரிலும் சரி கொழும்பு போன்ற வியாபார வட்டாரங்களிலும் சரி அவர் பிரபலமானவராயிருந்தார். பிரபலமானவராக இருந்தாலும் மிக எளிமையாகவே தோன்றுவார், பழகுவார். எந்த வயது மனிதருடன் பழகும் போதும் தானும் அந்த வயதிற்கு ஏற்றவனாக மாறி மிக இனிமையாகவும் சகஜமாகவும் பழகுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த காலங்களில் ஏற்பட்ட இடர்களிலிருந்து உறவினர்களைக் காப்பாற்றி பாதுகாக்க அவர் எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கது.

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்

இல் வாழ்வான் என்பான் துணை"

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக இல்லற தருமத்தைக் கடைப்பிடித்தவர். அதற்கேற்ற துணைவியாரும் அவருக்கு கிடைத்திருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இங்கே கனடாவுக்கு மூன்று கிழமை விடுமுறையை கழிக்க மாமியுடன் வந்தார். உற்றார், உறவினர் நண்பர்களைக் கண்டு உறவாடி மகிழ்ந்தார் பரிசில்கள் கொடுத்தார். ஊர் சுற்றிப் பார்த்தார். மிகவும் மகிழ்ச்சியாக எங்களுடன் தங்கியிருந்து எங்களையும் மகிழ்விததார்.

எப்பொழுதும் எல்லோருடனும் உற்சாகமாக உரத்த குரலில் இயல்பாக கதைப்பார். நண்பர்கள் நெருங்கியவர்களுடன் பழகும் சமயங்களில் பகிடிக் கதைகள் பேசி அட்டகாசமாகச் சிரித்து தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்வார். அவரின் குரல் இன்னும் எங்கள் வீட்டில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் மறைந்து விட்டார் என்பதை எங்களால் இன்னும் நம்பமுடியவில்லை.

திடீர் என்று எவரும் எதிர்பாராத நிலையில் எம்மைவிட்டு பிரிந்து சென்று விட்டார். எம்மால் இதை தாங்கி பொறுத்துக் கொள்ள இயலாமல் இருக்கின்றது. என்ன செய்ய முடியும், விதி இப்படி அமைந்து விட்டது.

அவரின் இனிய ஆத்மா இறைவன் திருவடியில் கலந்து முத்தி பெற்று, ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் அன்பு மனைவியும் மக்களும், பேரப்பிள்ளைகளும் ஆறுதல் பெற்று மன அமைதி அடைந்து சுகமுடன் வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

**உங்கள் நினைவுகளுடன்**

**வெற்றிவேல் குடும்பம்**

(Canada)

## இனிய நினைவுகள்

இருப்போர்க்கும் இல்லாமல் போனோர்க்கும் இடையில் எஞ்சியிருப்பது ஒரு நினைவுப் பாலம் மட்டுமே. இதன் வழியே எப்போதும் பயணம் செய்து நினைவுகளை மீட்டுக் கொண்டு வரலாம்.

1960- காலப்பகுதி, உரும்பிராய் சந்தி, மிக பிரமாண்டமாக வளர்ந்த அரச மரங்கள் குடைபோல் பரந்து விரிந்து சந்திக்க நிழல் கொடுக்கும். மின்சார வெளிச்சம் இல்லாத காலம். சந்தியில் இருந்த சில பிரபலமான பழைய கடைகளுக்கு போட்டியாக புதிதாக ஒரு பலசரக்குக்கடை பலாலி வீதியில் சந்திக்க தென்மேற்கு புறமாக ஒரு வாடகைக் கட்டிடத்தில் உருவாகியது. இண்டு கடைகள் சேர்ந்து ஒரு கடையாக இயக்கிய இக்கடையின் உரிமையாளராக துடிப்புமிக்க இளைஞன் திரு அம்பலவாணர் விக்னேஸ்வரன் திகழ்ந்தார்.

அந்நாளில் கொழும்பில் வேலை, கோழி மேய்த்தாலும் Government உத்தியோகம் வேண்டும் என்று தேடி, இளைஞர்கள் அங்கலாய்த்து ஓடித்திரிய, சொந்த ஊரிலேயே, தன் விவேகத்தையும் விடாமுயற்சியையும் மூலதனமாக கொண்டு வியாபாரத்தில் இறங்குவதற்கு, அசாதாரணணமான துணிவுள்ளவராக இருந்திருக்க வேண்டும். விக்கி அண்ணரின் எடுப்பான தோற்றமும், வசீகரமான புன்னகையும, கணீரென கதைக்கின்ற பாங்கும் இயல்பாகவே எவருக்கும் அவர் ஒரு நேர்மையான வியாபாரி அதற்குமேல் ஒரு கண்டிப்பான, ஆனால் கண்ணியமான மனிதர் என்பதைக் காட்டிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கடையில் பாக்கு முதல் பானைவரை, ஊசி முதல் உலக்கை வரை, முடிச்சுக் கயிறு முதல் துலாக்கயிறு வரை, மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், கிருமிநாசினி, உரம் என என்னவெல்லாம் வீடுகளுக்கும், தோட்டங்களுக்கும் தேவைப்படுமோ அவை எல்லாம் நியாயவிலையில் கிடைக்கப்பெற்றன.

விக்கி அண்ணரின் விடாமுயற்சியாலும், கடுமையான உழைப்பாலும் கிடைத்த வெற்றி, அவருக்கு உரும்பிராய்க்கு உள்ளேயே ஒரு நல்ல வரனை தேடித்தந்தது. 1966 ஆம் ஆண்டு உரும்பிராய் கருணாகர பிள்ளையார் கோவிலில் மிக சிறப்பாக திருமணம் நடைபெற்றது. (பொதுவாகவே ஊருக்குள் பொம்பளை கிடைப்பதென்றால் மிக நல்லவரென்றால்தான் சாத்தியம்)

திருமணத்தின் பின் இன்னும் மிக வேகமாகவே முன்னேறத் தொடங்கினார். கடை வியாபாரம் மட்டுமல்லாது, வெங்காயம், உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய், செத்தல் மிளகாய், வாழைக்குலை, முந்திரிகைப்பழம் என்பவற்றை தோட்டங்களிலேயே விவசாயிகளிடம் வாங்கி பிறரின் லொறிகள் மூலம் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்து பெரும் வியாபாரியாக உருவெடுத்தார்.

தொழில் வெற்றியால் கிடைத்த வருமானத்தில், சந்தியில் இருந்து சிறு தூரத்தில் பலாலி வீதியிலேயே ஒரு காணியை வாங்கி அழகான வீடொன்று கட்டி அதில் மகிழ்ச்சியுடன் தாம்பத்திய வாழ்வு வாழ்ந்து வந்த வேளை பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்து அதற்கு உமா எனும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். குட்டிப்பெண்ணின் வருகையால் தொழில் வளம் இன்னும் சிறக்கவே, சொந்தமாகவே ஒரு புதிய lorry ஒன்றை வாங்கி அதற்கு "UMA Transport" என பெயரிட்டு அந்த lorryயிலேயே கொழும்புக்கு ஏற்றுமதி இறக்குமதி என பெரும் தொழில் வர்த்தகராக முன்னேறிந்தார்.

விக்கி அண்ணரின் முன்னேற்றம் உரும்பிராயிலும் அயலூர்களிலும் இருந்த ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை கொடுத்ததோடு, அவர்களுக்கும் சொந்தமாக தொழில் தொடங்கி முன்னேறுவதற்கு பெரும் வழிவகைத்துக் கொடுத்தது. அறநெறி பிறளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் வெற்றியோடு பின்னர் பிறந்த இரு பெண்பிள்ளைகள் பாமா, ரமாவின் பெயர்களாலும் இரண்டு லொறிகள் வாங்கி வர்த்தகத்தொழில் செய்தார்.

கால ஓட்டத்தில் பிள்ளைகளும் படித்து பட்டதாரிகளாக வெளியேறுவதற்கு உரிய உதவிகள் செய்து, ஊர் போற்றும் அமைதியான பிள்ளைகளாக வளர்த்து மகிழ்ந்தார். சிலகாலம் உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணியன் கோவில் நிர்வாக சபைகயில் பங்பற்றி நிர்வாகம் சிறப்புற இயங்க உதவி செய்து மகிழ்ந்தார்.

நாட்டில் விடியாத விடியலுக்காய் நடந்த போராட்டங்களில் நாடே அல்லோலகல்லோலப்பட்டு, நாட்டிலுள்ளோர் எல்லாம் நாடோடிகளாய் உலகமெங்கும் சிதறி ஓட, விதி விலக்கில்லாமல் விக்கி அண்ணையும் தன் முதல் பிள்ளை உமாவை அவுஸ்திரேலியாவிலும், மற்றைய இருவர் பாமா, ரமாவை இலண்டனிலும திருமணம் செய்து கொடுத்து மகிழ்ந்து வாழ்ந்தார்கள். அவருடைய அபரிதமான முன்னேற்றத்துக்கு, ஆரம்ப காலத்தில் அவருடைய தமக்கையாரும், திருமணத்தின் பின்னர் அன்னாரின் அருமை மனைவியார் லவமக்காவும் மிகமிக உறுதுணையாக இருந்தவர்கள் என்பது மிக முக்கியமாக நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

கடந்த சில வருடங்களாக இலண்டனில் மகள்கள், பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வரும் வேளையில், திடீரென வந்த கடும் சுகவீனத்தால் பாதிக்கப்பட்டு மீளாத்துயிலில் ஆழ்ந்து மறைந்தார். எமது URUK யின் ஒவ்வொரு நிகழ்விலும் முழுக்குடும்பமாக கலந்து கொண்டு தானும் குஷிப்பட்டு, மற்றைய இளைஞர்களையும், குஷிப்படுத்தி மகிழ்ந்த காட்சி மனக்கண்முன் வந்து கண்களை பனிக்க வைக்கின்றன. லவமக்கா, உமா, பாமா, ரமா மற்றும் உறவினர்கசு, உங்களுக்கு ஆறுதல் கூற வார்த்தைகளே இல்லை. ஆனால் இயற்கையின் இயல்பிலும் மாற்றமேயில்லை!

பிரித்தானியா வாழ் உரும்பிராய்

மக்கள் (URUK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த அமரர். திரு அம்பலவாணர் விக்னேஸ்வரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு மன ஆறுதல் கூறியோர்க்கும், உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து தபால், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மரணச் சடங்கின்போது பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரிகைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதி நிகழ்வில், அந்தியேட்டி கிரியை, வீட்டுக்கிரியைகளிலும் பங்குகொண்ட உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும், இறுதியாக இந்த இனிய நினைவு மலரை குறுகிய காலத்திலே அச்சிட்டு உதவிய JR Print அச்சகத்தாருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print www.jrdigitals.com T: 0208 503 6643
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org